5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் ஆந்திரப் பிரதேச சட்டமன்ற மேலவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆந்திரப் பிரதேச மாநிலச் சட்டமன்ற மேலவைத் தலைவர், மாண்புமிகு டாக்டர் சக்கரபாணி அவர்கள், தற்போது பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவரைப் பேரவையின் சார்பில் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

7. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22– காவல் துறை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 23– தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
(இ) கோரிக்கை எண் 37– மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
—தொடர்ச்சி

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *720 மற்றும் 7.62* L.S.R. *துப்பாக்கிகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வழங்கப்பட்டவைதான். 2003-ல் 9* mm pistol-*கள் மற்றும் 5.56 இன்சாஸ் துப்பாக்கிகளையும் காவல் துறைக்கு வழங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான்.*

1991-ல் முக்கிய பிரமுகர்கள், மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் அயல்நாட்டுத் தலைவர்கள் ஆகியோரது பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்புக் குற்றப் புலனாய்வுத் துறை பிரிவு தொடங்கப்பட்டது,